செ.வெ.எண்:  734 நாள்:  11.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் நீட் மற்றும் ஜேஇஇ தேர்வில் அகில இந்திய இட ஒதுக்கீடு பெற்ற மாணவ மாணவியரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் பாராட்டு**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தஞ்சாவூர் C''அகடாமியில் நீட் மற்றும் ஜேஇஇ தேர்வு பயிற்சி பெற்று அகில இந்திய அளவில் இட ஒதுக்கீடு பெற்ற மாணவ மாணவியரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று(11.11.2020) பாராட்டினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் மாநகரில் C''அகடாமியில் கடந்த 4 ஆண்டுகளாக நீட் மற்றும் ஜேஇஇ போட்டி தேர்வுக்கு மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ் அகடாமியில் 2020 நீட் தேர்வில் 48 நபர்கள் தகுதி தேர்ச்சி பெற்றுள்ளனர் மாநில கல்வி பாடத் திட்டத்தின் கீழ் பயின்ற மாணவ மாணவியர்கள் நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று அகில இந்தியளவில் மருத்துவக்கல்லூரி இட ஒதுக்கீட்டில் மூன்று மாணவ மாணவிகளுக்கு ஆணை பெறப்பட்டுள்ளது மேலும் ஜேஇஇ 2020 தேர்வில் தேசிய அளவில் இரு மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்தி பாராட்டுக்களை தெரிவித்தார்.

பின்னர் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தற்பொழுது தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மாநில பாடத்திட்டத்தின் மூலமாக நீட் தேர்வில் அதிக மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர் இப் பாடத்திட்டத்தினை மாணவ மாணவர்கள் நன்கு புரிந்து கற்று அனைத்து நுழைவுத் தேர்வுகளும்,போட்டிகளும் பங்கு பெற்று வெற்றி பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ராமகிருட்டிணன் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சுவாமிநாதன் இளைஞர் நிதிக்குழும உறுப்பினர் திருமதி.இரா.சியாமாலா C''அகடாமி நிறுவனர் திரு.சே.விஜயரங்கன் நிர்வாக இயக்குனர் திரு.வி.ஸ்ரீராமுலு மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.